

மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் தொகுதிக்கு உட்பட்ட செம்பனார்கோயில் வடக்கு, தெற்கு, மத்திய ஒன்றியங்கள் வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ. 2) மற்றும் கழக செயல்வீரர்கள் கூட்டம் செம்பனார்கோயிலில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. பேசினார். உடன் மாநில விவசாய அணி இணை செயலாளர் ஆர்.அருள்செல்வம், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் எம்.எம்.சித்திக், ஏ.சி.என்.விஜயபாலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து. மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்ட கழக துணை செயலாளர் மு. ஞானவேலன், ஒன்றிய கழக செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், எம். அப்துல்மாலிக், அமிர்த.விஜயகுமார், பஞ்சு.குமார், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ். கே.முத்துராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் ஹர்ஷத், ஜெ.கபிலன், நத்தம் ஏ.வின்செண்ட் மற்றும் பலர் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கொள்ளிடம் கிழக்கு, மேற்கு. ஒன்றிய கழக செயல்வீரர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ. 2) கூட்டம் கொள்ளிடத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. பேசினார். உடன் மாவட்ட கழக அவைத் தலைவர் கே.ஜி.சீனிவாசன், சீர்காழி சட்டமன்றத் தொகுதி பார்வையாளரும், தலைமைக் கழக வழக்கறிஞருமான மு.தினேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.எம்.ரவி, மாவட்ட கழக துணை செயலாளர் எஸ்.செல்வமணி, ஒன்றிய கழக செயலாளர்கள் செல்ல சேது. ரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், பஞ்சு. குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.பி.கென்னடி, பி.சிவதாஸ், நத்தம் ஏ.வின்சென்ட், ஒன்றிய குழு முன்னாள் தலைவர் விஜய் பிரகாஷ் மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் கே.ஜி.எஸ்.பாண்டியன் மற்றும் பலர் உள்ளனர்.

### மு.தினேஷ்குமார் முன்னிலை! செல்லசேதுரவிக்குமார் வரவேற்புரை!

# கொள்ளிடம் மேற்கு - கிழக்கு ஒன்றியக் கழகப் பொது உறுப்பினர்கள் - வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. சிறப்புரை! கே.ஜி.சீனிவாசன் – மலர்விழிதிருமாவளவன் பங்கேற்பு!

மயிலாடுதுறை, மார்ச் 22 -

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கொள்ளிடம் மேற்கு கிழக்கு ஒன்றியங்களின் கிளை செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் (பி. எல்.ஏ. 2),வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (பி. எல்.சி ) வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (பி. டி.ஏ) மற்றும் பொது உறுப்பினர்கள் கூட்டம் கொள்ளிடம் அருண் பாலாஜி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.ஜி.சீனிவாசன், சீர்காழி சட்டமன்றத் தொகுதி பார்வையாளரும், தலைமைக் கழக வழக்கறிஞருமான மு.தினேஷ்குமார், கொள்ளிடம் கிழக்கு ஒன்றிய செயலாளர் மலர்விழி திருமாவளவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கொள்ளிடம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் செல்ல சேது ரவிக்குமார் வரவேற்றார்.

கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்ட கழக துணை செயலாளர் எஸ். செல்வமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் எம். பி.கென்னடி, பி சிவதாஸ், நத்தம் ஏ. வின்சென்ட், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர்கள் கே ஜி.எஸ். பாண்டியன், வீரமணி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ராதாகிருஷ்ணன், கொள்ளிடம் ஒன்றிய குழு முன்னாள் தலைவர் ஜெய பிரகாஷ், மாவட்ட ஊராட்சி குழு முன்னாள் உறுப்பினர் விஜய பாரதி கென்னடி, கொள்ளிடம் மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் துணை செயலாளர்கள் கே. அசோக்குமார், சுசீலா நாகலிங்கம், பி. செந்தில்குமார், பொருளாளர் டி.சண்முகம், மாவட்ட பிரதிநிதிகள் செந்தாமரைக்கண்ணன், எஸ். காமராஜ். கொள்ளிடம் கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் அவைத்தலைவர் எம்.இராஜேந்திரன், துணைச் செயலாளர்கள் ஜெ.இளவரசு, கே.கே. குமார், லதா சுப்பிரமணியன், மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.நாகராஜன், டி.இராமலிங்கம், என். இளங்கோவன், மயிலாடுதுறை நகர கழக நிர்வாகிகள் ஆர் கே சங்கர், ரகு மற்றும் மகளிர் அணி வசந்தி மகேஸ்வரி லட்சுமி வளர்மதி இளைஞர் அணி கார்த்திகேயன் மற்றும் சீனிவாசன், பாண்டியன்,கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளில் முன்னாள் பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடி கள், கழகத்தினர் கலந்து கொண்டனர்

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

கழகத் தலைவர் தளபதியின் தாரக மந்திரமான வெல்வோம் 200 + , படைப்போம் வரலாறு! என்பதற்கு இனங்க கழகத் தலைவர், திராவிட மாடல் அரசர், தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் செய்த மகத்தான சாதனைகளை ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று எடுத்துக்கூறி, பிரச்சாரம் செய்து அனைவரையும் தி.மு.க. வாக்காளர்களாக மாற்றி, கழகத் தலைவர் தளபதி அறிவிக்கும் வேட்பாளரை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற கழக நிர்வாகிகள், கழகத்தினர் வெற்றிக்கு உழைத்து கழகத் தலைவர் கரத்தை உயர்த்தி தமிழ்நாட்டில் மீண்டும் திராவிட மாடல் அரசு 2.0 அமைய சீர்காழி சட்டமன்ற தொகுதி கழகத் தலைவர் அறிவிக்கும் வேட்பாளரை அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற செய்ய கொள்ளிடம் மேற்கு மற்றும் கிழக்கு ஒன்றிய கழகத்தினர் பாடுபடுவோம் என்றும்,

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 7 வது முறையாகவும், கழகத் தலைவர் தளபதி தலைமையில் 2 முறையாக முதல்வராக கழக ஆட்சி அமைந்திட உழைத்திடுவது என்றும்,

தலைமை கழகத்தால் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ. 2 ) மற்றும் வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (பி.எல்..சி) ஆகியோரிடம் வாக்காளர் பற்றிய முழு விபரம் குறித்து கணக்கெடுப்பு எடுக்க வழங்கப்பட்ட நோட்டை உடன்முழுமையாக பூர்த்தி செய்து அந்த பணியை முடித்து ஒன்றிய கழக செயலாளர்களிம் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி. எல்.ஏ. 2 ) மற்றும் வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (பி.எல்..சி).யினர் வழங்கிட வேண்டும். என்றும்,

ஒன்றிய, பேரூர் பகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் பூத் வாரியாக ஸ்டாலின் மகளிர் படையினர் வீடு வீடாகச் சென்று கழக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறியும், 5 ஆண்டு கால திராவிட மாடல் அரசால் அந்த குடும்பத்தினர் பெற்ற நலத்திட்ட உதவிகளை எடுத்துக்கூறி பிரச்சாரம் மேற்கொண்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணியைச் சேர்ந்த ஸ்டாலின் மகளிர் படையினருக்கும், மகளிர் படையினருக்கு உரிய ஏற்பாடுகளை செய்த ஒன்றிய, பேரூர் செயலாளர்களுக்கும், உறுதுணையாக நின்ற கிளை, வார்டு கழக நிர்வாகிகளுக்கும் கழகத்தினருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும், கழக நிர்வாகிகள் புதிய வாக்காளர் பட்டியலை ஆய்வு செய்து கழகம் மற்றும் கழக ஆதரவு விடுபட்ட மற்றும் புதிய வாக்காளர்களை வரும் 26 ஆம் தேதிக்குள் படிவம் 6 பூர்த்தி செய்து பகுதி தேர்தல் அலுவலகம் வழங்கி வாக்காளர் சேமித்தல் முயற்சியில் கழகத்தின் ஈடுபட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


